

# நரக அக்கினி

ஒரு திரிக்கப்பட்ட சத்தியம் சிக்கல் அவிழ்க்கப்படுகிறது

எழுதியவர் : ஜோ க்ரூஸ்

Copyright © 2013, 2020
by Lu Ann Crews

All rights reserved.
Printed in India.

Published by:
**Amazing Facts India**
Post Box No 51
Banjara Hills, Hyderabad
Telangana, 500034

www.AmazingFactsIndia.org

# நரக அக்கினி

## ஒரு திரிக்கப்பட்ட சத்தியம் சிக்கல் அவிழ்க்கப்படுகிறது

**எழுதியவர் : ஜோ க்ரூஸ்**


1. நரகம் என்றால் என்ன அது எங்கே இருக்கிறது? .................................................. 2

2. நியாயத்தீர்ப்புக்குப் பின் தண்டனை ........... 5

3. உயிர்தெழுதலுக்கு முன்பாக இரண்டாம் மரணம் இல்லை ........................................... 11

4. நரகத்தின் இருப்பிடம் .................................. 14

5. நரக அக்கினி முடிவில்லாததல்ல ............... 17

6. அவியாத அக்கினி ........................................ 22

7. ஆத்துமாவும் சரீரமும் அழிக்கப்படுகிறது ........ 31

8. தேவனின் நீதி நிரூபிக்கப்படுகிறது ............ 33

9. வருத்தமோ மரணமோ இனி இல்லை ............. 35

10. நரகம் நமக்கென்று திட்டமிடப்பட்டதல்ல ....... 37

## அதிகாரம் ஒன்று

# நரகம் என்றால் என்ன அது எங்கே இருக்கிறது?

வேதாகமத்தில் இருக்கும் இறையியல் கோட்பாடுகளில் அதிகமான குழப்பத்தைத் தரும் தலைப்புகளில் ஒன்று நரகம் தான். அந்த வார்த்தை பொதுவான மோசமான ஒன்றாகவும் மற்றும் மூடி மறைக்கப்பட்ட வியப்பூட்டும் ஒரு பொருளாகவும் நன்கு அறியப்படும்வரை அது மதகுருமார்களால் தடுமாற்றமடையச் செய்யப்பட்டும் மற்றும் விசுவாசிகளால் சிதைக்கப்பட்டும் இருக்கிறது. எங்கும் மக்கள் இதே கேள்வியைக் கேட்கிறார்கள்: நரகம் என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? துன்மார்க்கருடைய முடிவு என்ன? அன்புள்ள தேவன் மக்களை நித்தியம் நித்தியமாக சித்திரவதை செய்வாரா? நரகத்தின் அக்கினி பாவிகளின் துன்மார்க்கத்தை எரித்துப்போடுமா?

இந்தக் கேள்விகளுக்கு சரியான வேதாகம விளக்கங்கள் தேவையே. கிறிஸ்துவில் இருக்கும் எல்லா சத்தியங்களையும் எடுத்துச் சொல்ல இந்தப் பொருள்பற்றி இருக்கும் எதிர்மறையான கருத்துக்கள் நம்மை தடை செய்துவிடக் கூடாது. முதலாவதாக, சுதந்தரித்துக் கொள்வதற்கு ஒரு பரலோகம் இருக்கிறது மற்றும் விலகியிருப்பதற்கு நரகம் என்கின்ற ஒன்றும் இருக்கிறது என்பதை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். ஒவ்வொறு ஆத்துமாவும் இரட்சிக்கப்படும் அல்லது இழக்கப்படும்

என இயேசு போதித்தார். இதில் நடுநிலை என்று ஒன்று கிடையாது மற்றும் இரண்டாம் பரிசுகளுக்கும் இடமில்லை. "மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்: அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள்" (மத்தேயு 13:41-43).

பிறந்திருக்கும் எல்லாருக்கும் இந்த நிச்சயமான இரண்டு முடிவுகள் இருக்கும்பட்சத்தில் சரியான பாதையை தெரிந்துதெடுப்பதற்கு நாம் எவ்வளவு ஜாக்கிரதைப்பட வேண்டும். கிறிஸ்து சொன்னார், "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்". இயேசு நரகத்தைப் பற்றி சொல்லிய போதனையைப் பின்பற்றுவதே எவருக்கும் சரியான பாதுகாப்பாக அமையும். அவருடைய கொள்கை மட்டுமே முழுமையுமாக ஏற்கக் கூடியதும் சத்தியமுமாயிருக்கிறது. சிலர் அக்கினி சூளையில் போடப்படுவார்கள், சிலர் பிதாவின் ராஜ்யத்தில் சூரியனைப் போல பிரகாசிப்பார்கள் என்று அவர் சொன்னார்.

விசித்திரமாக, இந்த பொருள் பற்றி தவறான போதனை செய்திருப்பதாக பல மதத்தலைவர்களால் இயேசு குற்றம் சாட்டப்படுகிறார். மரித்த பிறகு சாகாதன்மையுள்ள ஆன்மா உடலிலிருந்து

பிரிந்து பரலோகத்திற்கோ அல்லது நரகத்துக்கோ செல்லுகிறது என் கூறுவதாக அவர்கள் இயேசுவைக் குற்றப்படுத்துகிறார்கள். இப்படி இயேசு ஒருபோதும் போதிக்கவில்லை. மரித்த பிறகு உடலற்ற ஆன்மா சடலத்திலிருந்து பிரிந்து போகிறது என்று சிறிதளவு அறிவிப்பு கூட அவர் ஒருபோதும் கொடுக்கவில்லை. நிச்சயமாகவே, துன்மார்க்கர் இறந்தவுடனே முடிவில்லா சித்திரவதையை அனுபவிப்பார்கள் என்ற கருத்தை அவர் பதிவிடவே இல்லை.

நரகத்தைக் குறித்து இயேசு உண்மையில் என்ன போதித்தார் என்பதற்கு ஒரு மாதிரியைப் பார்ப்போம். "உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைத் தரித்துப்போடு; நீ இரண்டு கையுடையவனாய் அவியாத அக்கினியுள்ள நரகத்திலே போவதைப் பார்க்கிலும்..." (மாற்கு 9:43). எந்தவித சந்தேகத்துக்கும் இடமில்லாமல் இந்த வார்த்தைகள் உடல்தான் அக்கினிக்குப் போகிறது, ஏதோ விசித்திரமான ஆன்மா அல்ல என்று நிரூபிக்கிறது. மத்தேயு 5:30 - ல் "சரீரம் முழுவதும்" நரகத்துக்கு தள்ளப்படுகிறது என்று அவர் பேசினார். இதனுடைய பொருள், கால்கள், கண்கள் மற்றும் சரீரத்தின் மற்ற எல்லா உறுப்புகளும் நரகத்துக்கு தள்ளப்படுகிறது.

கிறிஸ்துவின் கோட்பாடுகளுக்கு மாறாக, நவீன கால மேடைகள் மரணத்துக்குப்பின் சரீரத்திலிருந்து கற்பனையான ஆன்மாக்கள் - கருப்பொருளும் வடிவமுமில்லாத ஆன்மாக்கள் - விடுபடுவதைப்போன்ற சித்தரிப்பு வியத்தகு விதத்தில் எதிரொலிக்கின்றன. இந்த பார்வை

பிரசித்திப் பெற்றிருந்தாலும், இயேசு போதித்ததற்கு ஒட்டுமொத்தமாக எதிரானது. நரக அக்கினியில் தள்ளப்படுபவர்கள், தங்கள் கைகள், கால்கள், கண்கள் மற்றும் எல்லா சரீர அவயவங்களுடன் செல்கிறார்கள் என்று எல்லா சுவிசேஷங்களிலும் திரும்ப திரும்ப முதன்மை ஆசிரியர் கூறுவதை நன்றாக பதிவு செய்து கொள்ளுங்கள். வடிவில்லாத ஆவியாக அல்லது ஆன்மாவாக ஒரு மிக தூய்மையான நிலையில் அவர்கள் செல்வதில்லை.

துன்மார்க்கரின் கடைசி முடிவுப் பற்றிய கேள்விகளுக்கு வேதாகமம் வெளிச்சம் போட்டு காட்டும் நான்கு பெரும் உண்மைகள் என்ன என்பதை ஆராய்வதற்கு நாம் இப்பொழுது தயாராயிருக்கிறோம்.

## அதிகாரம் இரண்டு

# நியாயத்தீர்ப்புக்குப் பின் தண்டனை

நரகத்தைப்பற்றிய முதல் முக்கியமான உண்மை இதுதான்: இரட்சிக்கப்படாதவர்கள் மரித்தவுடன் எந்த தண்டனை தரப்படும் இடத்திற்கும் செல்வதில்லை, ஆனால் தண்டனை பெறும்படி நியாயத்தீர்ப்பின் நாள் வரைக்கும் கல்லறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்து, இந்த சத்தியத்தை நன்றாக அறியப்பட்டிருக்கும் கோதுமை, களைகள் உவமை மூலம் மிகத் தெளிவாக போதித்தார். வீட்டெஜமான் நிலத்தில் கோதுமையை விதைத்தப் பின், அவனுடைய வேலைக்காரன் வந்து

கோதுமையோடு களைகளும் முளைத்திருந்ததை அறிவித்தான். அவைகள் சிறியதாய் இருக்கும்போதே அந்த களைகளை பிடுங்கிப் போடலாமா என்பதே அவனுடைய கேள்வி. வீட்டெஜமானின் பதில் இதுதான், "...வேண்டாம், களைகளைப் பிடுங்கும் போது நீங்கள் கோதுமையையும்கூட வேரோடே பிடுங்காதப்படிக்கு, இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள். அறுப்புக் காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளை சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள் கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள்..." (மத்தேயு 13:29, 30).

இந்த உவமையின் அர்த்தத்தை விளக்கிக் காட்டுகின்ற கிறிஸ்துவினுடைய வசனங்களை இப்பொழுது கவனியுங்கள்: "...நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன்; நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்; களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்; அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவதூதர்கள். ஆதலால், களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறது போல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும். மனுஷ குமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து, அவர்களை அக்கினிச் சூளையிலே

போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.” (மத்தேயு 13:37-42).

இயேசு கூறியதை பெரிதுபடுத்துவதின் மூலம் ஒருவரும் இந்த உவமையை இவ்வளவு எளிமைப்படுத்தி சொல்லமுடியாது. ஒரு குழந்தை கூட புரிந்து கொள்ளும் அளவுக்கு அது தெளிவாயிருக்கிறது. களைகள் பொல்லாங்கனுடைய புத்திரரைக் குறிக்கிறது மற்றும் அவர்கள் “இவ்வுலகத்தின் முடிவில்” அக்கினிச் சூளையிலே போடப்படுவார்கள் என்று அவர் சொன்னார். அறுவடையிலே இந்த பிரித்தெடுத்தல் நடைபெறும் மற்றும் அவர் புரியும்படி சொன்னது, “அறுப்பு உலகத்தின் முடிவிலே நடக்கும்”. கிறிஸ்துவின் இந்த வார்த்தைகளை எப்படி எவரும் தவறாக புரிந்து கொள்ளமுடியும்? நமது கர்த்தர் மிகத் தெளிவாக துன்மார்க்கர் உலகத்தின் முடிவில் அக்கினிச்சூளையில் தள்ளப்படுவார்கள் என கூறியிருக்கும்போது மரித்தவுடன் அவர்கள் அக்கினியில் போடப்படுவர் என்கின்ற மொத்த கருத்தும் எதிர்மறையாக இருக்கிறது.

நியாயத்தீர்ப்பும் கூட கிறிஸ்து வந்த பிறகு தான் நடைபெறும் என்பதால், அந்த வேளைக்கு முன்பாக எவரும் ஆக்கினைக்குட்படுத்தப்படுவர் என்பது எவ்வளவு அசாத்தியமானது என்பதை நம்மால் காண முடிகிறது. ஒருவர் தண்டனைக்குட்படுமுன் அவர் விசாரிக்கப்பட வேண்டுமென்பது நீதியாகும். பேதுரு உரைத்தது, “கர்த்தர் தேவப்பக்திள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை

ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்.” (2 பேதுரு 2:9). இது ஞானமாய் தோன்றுகிறது, இல்லையா? ஒரு மனிதன் திருடிய குற்றத்திற்காக நீதிமன்றம் கொண்டு செல்லப்பட்டு, நீதிபதி இவ்வாறு சொல்வதாக எண்ணிக்கொள்வோம், “அவனை பத்துவருடம் சிறையில் வையுங்கள், பிற்பாடு அவனுடைய வழக்கை விசாரிப்போம்.” கவனியுங்கள், மனித நீதிபதி கூட இப்படி நியாயமற்ற முறையில் நடக்கமாட்டார்! அப்படிப்பட்ட செயலுக்கு அவர் குற்றஞ்சாட்டப்படுவார். நிச்சயமாகவே, தேவன் இப்படிப்பட்ட கேலிக்கூத்தான குற்ற உணர்வுடன் இருக்கமாட்டார்.

வேதாகமம் சொல்வதை நாம் ஏற்றுக்கொள்வோமெனில், இந்த கருத்து பற்றி சந்தேகமே இருக்காது. துன்மார்க்கர் “வைக்கப்பட்டிருக்கிறார்கள்” எதுவரை? நியாயத்தீர்ப்பின் நாள்வரைக்கும், எதற்காக? “ஆக்கினைக்குள்ளாக்குவதற்கு”! இதன் பொருள் நியாயத்தீர்ப்பின் நாளுக்கு முன்பாக அவர்கள் ஆக்கினைக்குட்படுத்தப்படமாட்டார்கள். அதுவரை அவர்கள் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என வேதாகமம் சொல்லுகிறதா? கிறிஸ்து தாமே சொன்னார், “இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்: ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்: அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை

அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28, 29).

எவ்வளவு தெளிவு! நல்லவர், தீயவர் இருசாராருமே ஜீவனைப்பெற்றுக்கொள்ளவோ, ஆக்கினை அடையும்படியோ கல்லறையிலிருந்து புறப்பட்டு வருவார்கள். மரண நாளிலிருந்து அவர்கள் உயிர்த்தெழுந்து வெளியே வரும்வரை அவர்கள் எந்த முடிவையோ அல்லது தண்டனையையோ அடைவதில்லை என்பதை இது நிரூபிக்கிறது. அவர்கள் வெளியில் வரும்போதுதான் இதெல்லாம் நடைபெறுகிறது. பேதுரு சுட்டிக்காட்டியது போல அவர்கள் அந்த நாளுக்காக வைக்கப்பட்டிருக்கிறார்கள், ஆனால் கிறிஸ்துவானவர் அவர்கள் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என விளம்புகிறார் – "பிரேதக்குழிகளில்".

இன்னமும் தெளிவான வார்த்தைகள் வேண்டுமென்றால் இயேசு சொல்வதை லூக்கா 14:14ல் கவனியுங்கள், "...நீதிமான்களின் உயிர்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்." அல்லது மத்தேயு 16:27-ல் அவர் சொல்வதைக் கேளுங்கள், "மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடும்கூட வருவார். அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்." அந்த "அப்பொழுது" என்பது எப்பொழுது? அவர் தம்முடைய தூதர்களோடு வரும்பொழுது, அவர்

எல்லா தூதர்களுடன் வரும்போது நீதிமான்கள் உயிர்ப்பிக்கப்படும் வரையில் எந்த பலனோ அல்லது பதில் செய்யப்படுதலோ கொடுக்கப்படுவதில்லை. இந்த வசனங்கள் சர்ச்சைக்கு அப்பாற்பட்டவை. இந்த சூழ்நிலையில் எடுத்துக்கொள்ளும் பொழுது, அவைகளில் புரியாத புதிரோ, அல்லது மறைமுக அர்த்தமோ இல்லை.

மறுபடியும், வேதாகமத்தின் கடைசி அதிகாரத்தில் கிறிஸ்து மேற்கோள் காட்டப்படுகிறார், “இதோ, சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது.” (வெளிப்படுத்தின விசேஷம் 22:12). கிறிஸ்து பூமிக்கு திரும்ப வரும்போது “அவனவன்” - ஒவ்வொருவரும் - தக்க பலனை அடைவார்கள் என இங்கே அவர் நினைவூட்டுகிறார். யோபு அறிவிக்கிறார், “துன்மார்க்கன் ஆபத்து நாளுக்கென்று வைக்கப்பட்டிருக்கிறான். அவன் கோபாக்கினையின் நாளுக்கென்று கொண்டுவரப்படுகிறான்.” (யோபு 21:30). தானியேல் எழுதியது, “பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்” (தானியேல் 12:2).

உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு, ஆக்கினை இவற்றை சந்திக்கும் முன்பாக துன்மார்க்கர் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இருக்க முடியுமா? பேதுரு,

தானியேல், யோபு மற்றும் பிரதான போதகர் இயேசு, இவர்களுடைய சாட்சிகளை நாம் பெற்றிருக்கிறோம். சொல்புரட்டுக்கு அங்கே இடமில்லை, அவர்கள் கல்லறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

நரகத்தைப் பற்றிய இரண்டாவது பெரிய உண்மைக்கு இப்பொழுது நாம் வருகிறோம். உலகத்தின் முடிவில் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன்பதாக இரட்சிக்கப்படாதோரில் ஒருவரும் நரக அக்கினியில் தள்ளப்படுவதில்லை. இந்த தலைப்பில் போதுமான ஆதாரங்களை நாம் ஏற்கனவே பார்த்திருந்தாலும், இன்னும் சிலவற்றைப் பார்ப்போம். துன்மார்க்கரின் ஆக்கினைத் தீர்ப்பைப் பற்றி யோவான் விவரித்து எழுதினார்! "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 21:8).

## அதிகாரம் மூன்று

# உயிர்தெழுதலுக்கு முன்பாக இரண்டாம் மரணம் இல்லை

தங்கள் பாவங்களுக்கு தண்டனையாக இழந்துபோன மக்கள் நரக அக்கினியில் தள்ளப்படுவதாக இங்கு சித்தரிக்கப்படுகிறார்கள்.

அந்த தண்டனை என்ன? யோவான் சொல்வது, “இரண்டாம் மரணம்”. துன்மார்க்கரைக் குறித்து இது என்ன நிரூபிக்கிறது என உங்களால் உணர முடிகிறதா? உயிர்த்தெழுதல் சம்பவிக்கும் வரை அவர்கள் அக்கினிக்கடலில் தள்ளப்படமாட்டார்கள் என்பதை இது நிரூபிக்கிறது. இந்த மக்கள் அக்கினியில் இரண்டாம் மரணத்தில் மரிக்கின்றார்கள், ஆனால் இரண்டாம் ஜீவனை பெறும்வரையில் அவர்கள் இரண்டாம் மரணத்தை அடையமாட்டார்கள். அவர்கள் இந்த உலகில் முதல் வாழ்க்கையை வாழ்ந்தார்கள். முதல் மரணத்தை அடைந்து கல்லறைக்குச் சென்றார்கள். இரண்டாம் மரணத்தை அடையுமுன்பாக அவர்கள் உயிர்த்தெழுப்பப்பட வேண்டும். இரண்டாம் ஜீவனை அவர்கள் அடைய வேண்டும். உலகத்தின் முடிவில் இதுதான் நடைபெறுகிறது. இயேசு சொன்னார், “கல்லறைகளில் இருக்கின்ற அனைவரும் எழுந்திருப்பார்கள்.”

உயிர்த்தெழுதலுக்குப்பிறகு இரண்டாம் ஜீவனைப் பெற்ற பின் அக்கிரமக்காரர் தங்கள் பாவங்களுக்காக நரக அக்கினியில் தள்ளப்பட்டு ஆக்கினை அடைவார்கள், “இதுவே இரண்டாம் மரணம்”. அதோடு கூட, இரண்டாம் மரணம் இறுதியானது, அது நித்திய அழிவு; அதிலிருந்து வேறு உயிர்த்தெழுதல் கிடையாது. ஆனால் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம், நரக அக்கினியின் தண்டனை கொடுக்கப்படும் வேளை - அது உலக முடிவுக்குப்பின் வரும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகுதான். நிறைய பேர் நம்ப வைக்கப்படுவது

போல அது முதல் மரணத்துக்குப்பின் நடைபெறும் சம்பவம் அல்ல.

துன்மார்க்கர் எப்படி அக்கினிக் கடலில் தள்ளப்படுகிறார்கள் என்று வேதாகமம் சொல்லுகிறதா? ஆம், வேதாகமம் சொல்லுகிறது. ஆயிரம் வருட அரசாட்சிக்குப்பிறகு நடைபெறும் வியத்தகு சம்பவங்களை யோவான் விவரிக்கிறார். "அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம் போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக் கொள்ளும்படிக்கும் புறப்படுவான். அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துக் கொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப் போட்டது." (வெளிப்படுத்தின விசேஷம் 20:7-9)

ஆயிரவருட அரசாட்சியின் முடிவில் இதற்கு முன்னால் வாழ்ந்திருந்த அக்கிரமக்காரர்கள் யாவரும் இப்பொழுது இரண்டாம் உயிர்தெழுதலில் எழும்பி வருவார்கள். நீதிமான்கள் எவ்வாறு உயிர்த்தெழுந்து கிறிஸ்துவோடுக் கூட ஆயிரம் வருடம் அரசாட்சி செய்வார்கள் என்பதை விவரித்துக் கூறிய பின்பு யோவான் எழுதியது, "மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை"
(வெளிப்படுத்தின விசேஷம் 20:5).

மரணமடைந்த மற்றவர்கள், நிச்சயமாக, துன்மார்க்கராய் இருக்க வேண்டும், மற்றும் அவர்களுடைய உயிர்த்தெழுதல் சாத்தான் தேவனோடும் பரிசுத்தவான்களோடும் அவனுடைய தொடர் யுத்தத்தை செய்ய ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கும். மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட அக்கிரமக்காரர்களின் கூட்டத்தை கூட்டிச்சேர்க்க அவன் புறப்பட்டு செல்கிறான். மறுபடியும் ஒருமுறை வஞ்சிப்பதற்கு அவனுக்கு ஜனங்கள் கிடைக்கிறார்கள், மற்றும் பரலோகத்தை விட்டு தேவனிடமிருந்து வந்த புதிய எருசலேமுக்கு எதிராக புறப்பட அவர்களை நம்பவைக்கிறான். (வெளிப்படுத்தின விசேஷம் 21:2). அவர்கள் பரம்பி அந்த நகரத்தை சுற்றிவளைக்கும்போது திடிரென வானத்திலிருந்து அக்கினி இறங்கி துன்மார்க்கரை பட்சித்துப்போடும். இதுதான் நரக அக்கினி; இதுவே பாவத்திற்கான கடைசி தண்டனை.

## அதிகாரம் நான்கு

# நரகத்தின் இருப்பிடம்

“பூமியெங்கும் பரம்பி” இருக்கிற துன்மார்க்கரை அக்கினி பட்சித்துப்போடும் என வேதாகமம் மிகத்தெளிவாக வலியுறுத்துகிறது. நரகத்தின் பொருள் பற்றி, பேசும் ஒவ்வொரு வேதாகம எழுத்தாளரும், துன்மார்க்கரின் இரண்டாம் மரணம் குறித்து புதிய உட்பார்வையை வைக்கிறார்கள். பேதுரு கூறுகிறார், “இப்பொழுது இருக்கிற வானங்களும்

பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது.” (2 பேதுரு 3:7). தொடர்ந்து அவர், கர்த்தருடைய நாளில் பூதங்கள் வெந்து உருகிப்போம் என விவரிக்கிறார்.

பேதுருவின் மொழி நடை, மிக விரிவாக தேவபக்தியற்றவர்களுக்கு கிடைக்கும் தண்டனையின் இடம் எது என்பதை காட்டுகிறது. இந்த பூமி துன்மார்க்கருக்குக் கொடுக்கப்படும் நியாயத்தீர்ப்புக்கும் அழிவுக்குமான அக்கினிக்காக காக்கப்பட்டிருக்கிறது என அவர் விளம்புகிறார். அவர்களுடைய தண்டனை இந்த பூமியில் தான் இருக்கும். ஏசாயா இவ்வாறு அறிவிக்கிறார், “அது கர்த்தர் பழி வாங்கும் நாள், சீயோனுடைய வழக்கினிமித்தம் பதிலளிக்கும் வருஷம். அதின் ஆறுகள் பிசினாகவும், அதின் மண் கந்தகமாகவும் மாறி, அதின் நிலம் எரிகிற கீலாய்ப்போம்” (ஏசாயா 34:8, 9).

முழு கிரகமும் அழிக்கின்ற அக்கினியால் மூடப்படுகிறது என தீர்க்கதரிசி படம் பிடித்து காட்டுகிறார். ஆறுகளும் நிலமும் கூட வெடித்து சிதறும் கீலாகவும் கந்தகமுமாகவும் மாற்றப்படுகின்றன. இது தேவனுடைய பழிவாங்குதல் மற்றும் போராட்டத்தின் கடைசி “பதிலளித்தல்” ஆகும் என ஏசாயா சொல்கிறார்.

இந்த சாட்சியத்துக்கு வலுசேர்க்கும் படி தாவீது இந்த வார்த்தைகளை சொல்லுகிறார், “துன்மார்க்கர்

மேல் கண்ணிகளை வருஷிக்கப்பண்ணுவார்; அக்கினியும் கந்தகமும் கடுங்கோடைக் கொந்தளிப்பும் அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின் பங்கு." (சங்கீதம் 11:6). துன்மார்க்கரின் முடிவினை வருணிப்பதற்கு யோவானும் பேதுருவும் பயன்படுத்துகின்ற வார்த்தைகளைப்போலவே இவரும் எறக்குறைய அதே வார்த்தைகளை பிரயோகிப்பதை கவனியுங்கள். தண்டனையடையும் இடம் (பூமி) பற்றியும், தண்டனையை அளிப்பது எது (அக்கினி) என்பது பற்றியும் அனைவரும் ஒப்புகொள்கிறார்கள்.

நரகத்தைப் பற்றிய மூன்றாவது உண்மையை அறிய இது வழி நடத்துகிறது: நியாயத்தீர்ப்பின் நாளிலே இந்த பூமியே அக்கினிக் கடலாக மாறி அதுவே தண்டனை அளிக்கும் நரகமாக இருக்கிறது. எப்படியும், இழந்து போனவர்களின் நிலை என்ன என்பதை அறியும்படி வேறு சில சுவாரஸ்யமான கேள்விகளை இது எழுப்புகிறது. அதிகமான குழப்பமும், புதிருமான கேள்விகளில் ஒன்று தண்டனையின் அளவு பற்றியதுதான். எவ்வளவு காலம் துன்மார்க்கர் அந்த அக்கினியில் தரித்திருந்து துன்பப்படுவர்?

இதற்கான பதிலை ஒருவரும் துல்லியமாக கொடுக்க முடியாது, ஏனென்றால் அவர்கள் தங்கள் கிரியைக்குத்தக்க பலனை அடைவார்கள் என்று வேதாகமம் சொல்லுகிறது. அதன் அர்த்தம் வெவ்வேறு அளவான தண்டனைகள் இருக்கின்றன. ஒரு சிலர் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக துன்பப்படுவர். ஆனால் ஒரு காரியத்தை நிச்சயமாக

நாம் சொல்லமுடியும் - துன்மார்க்கர் நித்தியம் நித்தியமாக அந்த அக்கினியில் வாழமாட்டார்கள்.

## அதிகாரம் ஐந்து
# நரக அக்கினி முடிவில்லாததல்ல

இந்த பொருள் குறித்த நிச்சயத்துக்கு நிறைய காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, இந்த பூமி நீதிமான்களின் கடைசி தாபரமாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இயேசு சொன்னார், “சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்” (மத்தேயு 5:5). இந்த பூமி மடமடவென்று அகன்று வெந்து உருகிப்போகிறதை பேதுரு விவரித்தப்பிறகு நீதி நிறைந்திருக்கின்ற புதிய பூமியை காண்கிறார். “அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்” (2 பேதுரு 3:13).

துன்மார்க்கர் இந்த பூமியில் தொடர்ந்து வாழமுடியாது, ஏனென்றால் அது ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததிக்கென நித்தியத்திற்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 4:13) பாவத்தின் சாபம் களைந்தெடுக்கப்பட்டபிறகு, முதல் அரசாட்சிக்கும், தேவனுடைய அதன் அசல் திட்டத்திற்க்கும் அது மருபடியும் திரும்பும். அது கடைசியாக தேவன் என்ன நோக்கம்

கொண்டிருந்தாரோ அதன்படி இருக்கும் - பரிசுத்த ஜனங்களுக்கு ஒரு பரிபூரண இருப்பிடம்.

இரண்டாவதாக, துன்மார்க்கர் இந்த பூமியில் தொடர்ந்து வாழ முடியாது ஏனென்றால் நித்திய ஜீவனைப் பெற கிறிஸ்துவை அவர்கள் ஒருபோதும் விசுவாசித்ததில்லை. நீதிமான்கள் மட்டுமே நித்திய ஜீவன் என்னும் ஈவை பெற்றுக்கொள்வர். “தேவன், தம்முடைய ஒரேபேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” (யோவான் 3:16). ஆனால் அவரில் நம்பிக்கை வைக்காதவர்கள் பற்றி என்ன? நிச்சயமாகவே அவர்கள் கெட்டுபோவார்கள். வேதாகமம் சொல்லுகிறது, “பாவத்தின் சம்பளம் மரணம்” (ரோமர் 6:23). இந்த வசனங்களின் எளிமையை தயவுசெய்து கவனிக்கத் தவறாதீர்கள். துன்மார்க்கர் ஒருபோதும் நித்திய ஜீவனுக்கென்று வாக்களிக்கப்படவில்லை. அவர்களுக்கு வாக்களிக்கப்படுவது மரணமே - நித்திய மரணம். நீதிமான்களுக்கு மட்டுமே ஜீவன் வாக்களிக்கப்படுகிறது. - நித்திய ஜீவன்.

ஆனால், அழிவில்லாத ஜீவனைப்பெற ஒரே ஒரு வழிதான் உண்டு, அது இயேசுவை விசுவாசிப்பதின் மூலம் மட்டுமே. யோவான் இதனை இவ்வாறாக விவரிக்கிறார்; “தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்த சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய

குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.” (1 யோவான் 5:11, 12). நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்க அனுமதியுங்கள்: அக்கினிக்கடலில் இருக்கும் துன்மார்க்கமானவர்கள் குமாரனைப் பெற்றிருக்கிறார்களா? நிச்சயமாவே இல்லை. அப்படியில்லையென்றால் எப்படி ஜீவனை பெற்றிருக்க முடியும்? யோவான் சொல்கிறார், “மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்.” (1 யோவான் 3:15). அந்த கொலைபாதகர்கள் நரக அக்கினியில் தொடர்ந்து நித்திய ஜீவனைப் பெற்றிருப்பார்களா? ஒருபோதும் இல்லை.

அந்த நித்திய ஜீவனை இயேசுவை தவிர்த்து வேறு எங்கிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும் என நம்புவது கடைந்தெடுத்த வேதப்புரட்டு. துன்மார்க்கன் எங்கிருந்து அதனை பெறுவர்? பவுல் அறிவிப்பது, இயேசு கிறிஸ்து “ஜீவனையும் அழியாமையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்” (2 தீமோத்தேயு 1:10). கிறிஸ்துவின் சுவிசேஷம் மட்டுமேயல்லாது வேறெந்த ஆதாரத்திலிருந்தும் சாவாமை நிலைமையை பெற முடியாது என்பதை வேதாகமம் வெளிப்படுத்துகிறது. துன்மார்க்கர் மீது சாகாதன்மை அளிக்கப்படுகிறது என்று விவரிக்கின்ற ஒரு வசனம் வேதாகமத்தில் எங்கே இருக்கிறது? நீதிமான் அதனைப் பெற்றுக் கொள்வதைப்பற்றி அடிக்கடி நீங்கள் வாசிக்கலாம், ஆனால் அவிசுவாசி ஒருபோதும் இல்லை.

பவுல் சொன்னார், “இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளவேண்டும். (1 கொரிந்தியர் 15:51-53).

இந்த வசனம், நீதிமான்கள் எப்பொழுது இமைபொழுதில் சாவாமை நிலையுள்ளவர்களாகிறார்கள் என்கின்ற கருத்தைப்பற்றி பேசுகிறது. அந்த நேரம் இன்னமும் எதிர்காலமாயிருக்கிறது. இயேசு திரும்ப வரும்போது, கடைசி எக்காளம் தொனிக்கும்போது, உயிர்த்தெழுதல் நடக்கும் போது இது சம்பவிக்கின்றது. வேதாகமத்தில் எங்குமே துன்மார்க்கர் இப்படி மாறுவார்கள் என நாம் வாசிப்பதில்லை. அவர்கள் ஒருபோதும் நித்திய ஜீவன் என்கின்ற வரத்தைப் பெறுவதில்லை என்பது மிக துல்லியமாக இருப்பதால் அவர்களால் நித்திய அக்கினிக்கடலில் தொடர்ந்து ஜீவித்துக் கொண்டிருக்க முடியாது.

இப்படி ஒரு நிகழ்வை புனைந்து சொல்லுதல் நினைத்துப்பார்க்க முடியாததும் நியாயமற்றதாகவும் இருக்கிறது. இது வேதாகமத்துக்கு

எதிர்மறையாகவும், இயலுணர்வுகளுக்கு விரும்பத்தகாததாகவும் இருக்கிறது. எசேக்கியேல் அறிவிக்கிறார், “பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்” (எசேக்கியேல் 18:4). ஆத்துமா எப்படியிருக்கும் என்பதை நாம் எப்படி புரிந்துக் கொண்டாலும், அது பாவத்தின் காரணமாக மரிக்கக்கூடும் மற்றும் மரிக்கிறது என்கின்ற எளிமையான வேதாகம உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

துன்மார்க்கர் அக்கினியில் நித்திய காலமாக ஜீவிப்பார்கள் என்றால், வெவ்வேறு இடங்களில் இருக்கிறார்கள் என்பதைத் தவிர நீதிமான்கள் பெறுவது போலவே அவர்களும் அதனைப் பெற்றுக்கொள்கிறார்கள். கிறிஸ்துவைத் தவிர வேறு யார் அவர்களுக்கு நித்திய ஜீவனை கொடுக்க முடியும்? யோவான் 3:16 இந்த பிரச்சனையை மிகத்தெளிவாகவும், எளிதாகவும், தீர்க்கிறது. யாரெல்லாம் ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கவில்லையோ அவர்கள் கெட்டுப்போகிறார்கள். அவர்கள் மரிப்பார்கள். அவர்கள் இரண்டாம் மரணத்தை அடைவார்கள்-திரும்ப ஒரு போதும் எழுப்பப்பட முடியாத ஒரு நித்திய மரணம். அந்த மரணம் ஒருக்காலும் முடிவுபெறாது. அது முடிவற்ற நித்திய தண்டனையாக இருக்கின்றது, ஏனென்றால் அது ஒரு முடிவற்ற நித்திய மரணம்.

## அதிகாரம் ஆறு
# அவியாத அக்கினி

சிலர் இந்தக் கேள்வியை எழுப்பக்கூடும்: துன்மார்க்கரை எரிக்கின்ற அவியாத அக்கினி பற்றி என்ன? அதன் அர்த்தம் அது ஒருபோதும் முடிவடையாததா? நிச்சயமாக அத அப்படியல்ல. அவித்தல் என்றால் அணைத்தல் அல்லது முடிவுக்கு கொண்டுவருதல் என பொருள்படும். நரகத்தின் அக்கினியை யாராலும் அணைத்துப் போட முடியாது. அது தேவனின் வினோதமான அக்கினி. அதை அணைத்துப் போட்டுவிட்டு அதிலிருந்து ஒருவராலும் தப்பிக்க முடியாது.

அந்த அக்கினிப் பற்றி ஏசாயா சொல்கிறார், “இதோ, அவர்கள் தாளடியைப் போல இருப்பார்கள், நெருப்பு அவர்களைச் சுட்டெரிக்கும்; அவர்கள் தங்கள் பிராணனை அக்கினி ஜீவாலையினின்று விடுவிப்பதில்லை, அது குளிர்காயத்தக்க தழலுமல்ல; எதிரே உட்காரத்தக்க அடுப்புமல்ல” (ஏசாயா 47:14). தன்னுடைய அழிவின் வேலையை செய்து முடித்தப்பிறகு அந்த அக்கினி முடிவடையும். அதை அணைத்துப் போடுவதன் மூலம் அக்கினி ஜீவாலையிலிருந்து ஒருவரும் தங்களை விடுவித்துக் கொள்வதில்லை, ஆனால் இறுதியாக ஒரு கரித்துண்டு கூட மிஞ்சுவதில்லை. இப்படித்தான் வேத வசனங்கள் சொல்கின்றன.

எருசலேம் அவிந்து போகாதிருக்கும் ஒரு அக்கினியினால் தீக்கொளுத்தப்படும் என்று எரேமியா தீர்க்கதரிசனம் சொல்கிறார். (எரேமியா 17:27)

ஆனால் அது எரிந்து சாம்பலாக்கப்படும். (2 நாளாகமம் 36:19-21). இந்த வசனங்களை வாசித்து “அவித்தல்” என்கின்ற வார்த்தையை வேதாகமம் எப்படி பயன்படுத்துகிறது என்பதை கவனியுங்கள். அக்கினி எப்போதும் அழியாதது என பொருள்படவில்லை. அது “அவிந்து போகாதிருக்கும்” எனும் பொருள்பட கூறுகிறது. அது அணைக்கப்பட முடியாதது.

நரகத்தின் அக்கினிப்பற்றி சொல்லும் போது “நித்தியம்” மற்றும் “சதாகாலம்” என்கின்ற சொற்கள் வெளிப்படுத்தப்படுவதைப் பற்றி நாம் என்ன சொல்லலாம்? வேதாகமம் இந்த வார்த்தைகளுக்கு தனது வரையறையை சொல்ல நாம் அனுமதிக்கும்போது, இதிலே எந்தவித குழப்பமோ எதிர்மறையான கருத்தோ கொஞ்சமும் இல்லை. அவர்களுடைய பழங்கால சூழ்நிலையின் குறிப்பை கவனிக்காமல் இந்த வார்த்தைகளுக்கு அநேகர் நவீன கால அர்த்தங்களைக் கொடுத்து தவறிழைக்கிறார்கள். இது மொழிபெயர்ப்பின் மிக அடிப்படை நியமங்களின் ஒன்றை மீறுகிறதாயிருக்கிறது.

உண்மை என்னவென்றால், நித்திய அக்கினி எனும்போது அது எப்பொழுதும் அணையாது என்பது பொருளல்ல. யூதா 7 - ல் சோதோம் கொமோரா பட்டணங்களின் அழிவைப்பற்றி இதே வெளிப்பாடுதான் பயன் படுத்தப்படுகிறது. “அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும்,

அவர்களைப் போல் விபசாரம் பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்."

சோதோம் இன்னமும் எரிந்து கொண்டிருக்கவில்லை என்பது வெளிப்படையாக இருக்கிறது. ஒரு காலத்தில் இருந்த அந்த பழங்கால நகரங்கள் சவக்கடலுக்கு அடியில் மூழ்கி இருக்கின்றன. அப்படியும் அவைகள் "நித்திய அக்கினியால்" எரிந்தன மற்றும் இது ஏதோ ஒன்றிற்கு திருஷ்டாந்தமாக இருந்தது என்று நமக்கு சொல்லப்படுகிறது. எதற்காக அது திருஷ்டாந்தமாக இருக்கிறது? "சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து" (2 பேதுரு 2:6).

அதுவே தான்! சோதோம் பட்டணத்தை நித்திய அக்கினி சாம்பலாக்கியது துன்மார்க்கங்களுக்கு இறுதியில் என்ன நடக்கும் என்பதற்கு ஒரு திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மூல வாக்கியம் சரி என்றால், சோதோமையும் கொமாராவையும் அழித்த அதே விதமான அக்கினிதான் துன்மார்க்கரையும் அக்கினிக்கடலில் அழித்துப்போடும். அது நித்திய அக்கினியாகவே இருக்கும். இதன் பொருள் அது துன்மார்க்கரை எரித்து சாம்பலாக்கும் என்பதா? வேதாகமம் சொல்லுகிறது ஆம். "இதோ, சூளையைப்போல

எரிகிற நாள்வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள், வரப்போகிற அந்த நாள் அவர்களை சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; நான் இதைச் செய்யும் நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின் கீழ் சாம்பலாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (மல்கியா 4:1, 3).

வேறு எந்த மொழியின் வார்த்தைகளும் இவ்வளவு ஆணித்தரமாக அல்லது தெளிவாக சொல்லமுடியாது. இந்த நித்திய அக்கினி நித்தியத்துக்கும் சுட்டெரிக்கிறது. வேர் ஆகிய சாத்தானும் கடைசியில் பட்சித்துப்போடப்படுவான். நாம் வேதாகமத்தை தன்னைத்தானே அதன் வார்த்தைகளை விளக்குவதற்கு அனுமதிக்கும் போது மொத்த காட்சியும் எவ்வளவு முரண்பாடற்ற வகையில் காணப்படுகிறது. இந்த வெளிப்படையான வார்த்தைகளின் அர்த்தத்தைத் தவிர்ப்பதற்கு என்ன சுற்றிவளைக்கும் வார்த்தைகளின் கையாளுதல் தேவைப்படுகிறது? இருந்தாலும், வாழ்நாள் முழுவதும் பாரம்பரியத்தில் ஊறி இருப்பவர்கள் தங்கள் பழைய கருத்துப்படி அந்த வார்த்தைகளை, "அவர்களை சுட்டெரிக்கும்...அவர்கள் சாம்பலாயிருப்பார்கள்" என்று வாசித்து விட்டு இன்னமும் துன்மார்க்கர் உயிரோடிருந்து துன்பப்படுகிறார்கள் என வலியுறுத்துகிறார்கள்.

இந்த தலைப்பில் பலபொருள்படும் சில வசனங்கள் இருக்கின்றன என்று ஏற்றுக்கொண்டாலும், அவைகள் எல்லாம் அது சொல்லும் சூழ்நிலையை கவனிக்கும்போது ஒன்றுக்கொன்று இணைந்து போகின்றன என்பதை நாம் காண்கிறோம் மற்றும் வேதாகமமே அதனுடைய விளக்கத்தை கொடுக்க அனுமதிக்கப்படுகிறது.

வெளிப்படையான அர்த்தத்தை நாம் எடுத்துக் கொள்ளும்பொழுது, மத்தேயு 25:46 - ல் இயேசுவின் வார்த்தைகள் கூட குழப்பமாயிருக்கவில்லை. "இவர்கள் நித்திய அக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவன் அடையவும் போவார்கள்" அநேகர் "நித்திய ஆக்கினை" பற்றிய உணர்வு பூர்வமான வார்த்தைகளால் தடுமாறுகிறார்கள், ஆனால் அது "நித்திய தொடரும் ஆக்கினை" என்று சொல்லவில்லை என்பதை கவனியுங்கள். எந்த தண்டனையாயிருந்தாலும் அது முழுமை பெறும். வேதாகமம் என்ன அக்கினை என்று சொல்லுகிறதா? நிச்சயமாக, "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). அதனால்தான் இயேசு மரணம் நித்தியமாயிருக்கும் என்று சொன்னார். அது ஒருபோதும் முடிவதில்லை. அது ஒருபோதும் உயிர்த்தெழுதல் மூலமாக உடைத்தெடுக்கப்படமாட்டாது.

பவுல் தொடர்ந்து இந்த வார்த்தைகளால் எளிதாக்குகிறார் "தேவனை அறியதாவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு கீழ்ப்படியாதவர்களுக்கும்

யார் தண்டிக்கப்படுவார்கள்?" இதை கவனியுங்கள், தண்டனை என்ன என்பதை பவுல் சொல்லப்போகிறார். "அவர்கள் கர்த்தருடைய சன்னிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும், நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2தெசலோனிக்கேயர் 1:7,10). ஆதலால் தண்டனை நித்திய அழிவாக இருக்கிறது - முழுமையாக முற்றுப்பெறும் அழிவு. அதிலிருந்து உயிர்த்தெழுதலோ, அல்லது ஜீவனுக்கான நம்பிக்கையோ கிடையாது.

ஆனால் சாகாதிருக்கும் புழுபற்றி என்ன? நரகம் பற்றி இயேசு கூறின வார்த்தைகளை அநேகர் படித்திருக்கிறார்கள், "அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்." (மாற்கு 9:45, 46). சிலர் புழுவை ஆத்துமா என அர்த்தம் கொள்கின்றனர். இதைத் தான் இயேசு சொன்னாரா? வேதாகமத்தில் எங்குமே ஆத்துமாவை ஒரு புழுவுக்கு ஒப்பிட்டு சொல்லப்படவில்லை.

இந்த உதாரணத்தில் இயேசு "நரகத்திற்கு" "கெஹென்னா" என்கின்ற வார்த்தையை பயன்படுத்தினார். கெஹென்னா என்பது எருசலேமின் மதில்களுக்கு அப்பால் இருக்கின்ற எரிக்கப்படும் ஒரு இடமாக காணப்படுகிறது. கெஹென்னா பள்ளத்தாக்கிலிருந்து புகைமூட்டம் மேலெழும்பி வருவதை இயேசுவின் பேச்சை கேட்டவர்கள் பார்த்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை, அங்கேதான் மரித்தவர்களின் உடல்களும்,

குப்பைக்கூளமும் எப்பொழுதும் எரிக்கப்பட்டுக் கொண்டிருக்கப்படும் அழிவை உண்டாக்கும் தீப்பிழம்புக்கு அப்பால் ஏதாகிலும் விழுந்ததென்றால், மாமிசப் புழுக்கள் அதனை உடனே கபனிகரம் செய்துவிடும். அவர்கள் கண்கள் முன்பாக வைக்கப்பட்டிருக்கும் இந்த முழுமையான அழிவின் தெளிவான காட்சிகள் மூலம் இயேசு நரக அக்கினியின் முழுமையான அழிவுக்கு உதாரணமாக கெஹென்னா அக்கினியை பயன்படுத்தினார். அக்கினி ஒருபோதும் அவியாததாயிருந்தது மற்றும் புழுக்கள் செத்த உடல்கள் மீது எப்பொழுதும் வேலை செய்துக்கொண்டிருந்தன - ஒரு முழுமையான அழிவின் காட்சி.

அதிக சுலபமாக தவறாக அர்த்தம் கொள்ளப்படும் நரகம் பற்றிய வார்த்தை, "சதாகாலங்களிலும்" எழும்பும் புகை பற்றிய யோவானின் குறிப்பாக இருக்கலாம். வேதாகமத்தில் வேறு வகைகளில் பயன்படும் இந்த பதத்தின் உபயோகம் பற்றி அறிமுகமில்லாதவர்களுக்கு மிகவும் குழப்பமாயிருக்கும் என்பது உண்மையே. ஆனால் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் வசனங்களை ஒப்பிட்டுப்பார்க்கும்போது "சதாகாலம்" என்று வேதாகமத்தில் 57 முறை பயன்படுத்தப்படும் வார்த்தை ஏற்கனவே முடிந்துவிட்ட ஒன்றை சுட்டிக்காட்டுவதைப் பார்க்கலாம். வேறு வார்த்தைகளில், "சதாகாலம்" என்பது எப்பொழுதும் "முடிவில்லாதது" என அர்த்தம் கொள்வதில்லை.

அநேக குறிப்பிடத்தக்க உதாரணங்களை காட்டலாம், ஆனால் இரண்டு அல்லது மூன்று முக்கியமானவைகள் இருக்கின்றன. யாத்திராகமம் 21 - ல் சேவகத்தின் பரிமாணத்தைப்பற்றிய நிபந்தனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு அடிமை அவனுடைய விடுதலை காலத்தில் தான் சுதந்திரம் பெற்று விடுதலை பெற்றுப் போவதைக் காட்டிலும், தன் எஜமானனிடம் தொடர்ந்து சேவிப்பதை தெரிந்து கொண்டால் அப்பொழுது அவனுடைய காது கம்பியினால் குத்தப்படும் மற்றும் வேதாகமம் அறிவிப்பது ”அவன் என்றென்றைக்கும் அவனிடத்தில் சேவித்துக் கொண்டிருக்கக்கடவன்.” (வசனம் 6). ஆனால் அந்த மனித எஜமானை எவ்வளவு காலம் சேவிக்க வேண்டும்? உண்மையில் அவன் வாழும் காலம் வரையில், அப்படியென்றால், “என்றென்றைக்கும்” என்கின்ற வார்த்தை முடிவில்லாதது என அர்த்தமாகாது.

அன்னாள் அவளுடைய குமாரன் சாமுவேலை தேவனுடைய ஆலயத்துக்கு அவன் “அங்கே எப்பொழுதும் இருக்க” எடுத்துச் சென்றாள். (1சாமுவேல் 1:22). இருந்தாலும் வசனம் 28-ல் இவ்வாறு நாம் சொல்லப்படுகிறோம், “அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன்.” “எப்பொழுதும்” என்பதற்கான பொருள் அதனுடைய காலவரையின்மையைக் குறிக்கிறது. பொதுவாக, அது ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் இருக்கும் சூழ்நிலையைப் பொறுத்தது என

வரையறுக்கப்படுகிறது. திமிங்கலத்தின் வயிற்றில் யோனாவின் தங்குதல் கூட “என்றென்றைக்கும்” என வர்ணிக்கப்படுகிறது. (யோனா 2:6).

பரலோகத்தில் இருக்கும் நீதிமான்களின் ஜீவனையும் இது கட்டுப்படுத்திவிடும் என யாராகிலும் எதிர்க்கக் கூடும், ஏனென்றால் அவர்கள் தேவனை எப்போதும் மகிமைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என விவரிக்கப்பட்டிருக்கிறது. இரட்சிக்கப்பட்டவர்களுக்கும் இழந்துபோனவர்களுக்கும் அதே பதங்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் சூழ்நிலைகளின் ஈடுபாட்டில் அங்கே ஒரு பெருத்த வித்தியாசம் காணப்படுகிறது. பரிசுத்தவான்கள் சாகாமையின் வரத்தைப் பெற்றிருக்கிறார்கள். இப்பொழுது அவர்களுடைய ஜீவன் தேவனுடைய ஜீவனோடு ஒத்திருக்கிறது. சாகாமை என்பது “மரணத்துக்கேதுவல்லாதது” என பொருள்படும். அவர்களை சுட்டிக்காட்டும் “எப்பொழுதும்” என்று அவர்களைச் சுட்டிக்காட்ட பயன்படுத்தப்படும் வார்த்தை “முடிவில்லாத” என்றே பொருள்படும், ஏனென்றால், அவர்கள் ஏற்கனவே சாவாமையை தரித்துக்கொண்டவர்கள். ஆனால் “எப்பொழுதும்” என்று துன்மார்க்கரைப் பற்றி விவரிக்கும் போது நாம் சாகும் தன்மையுள்ள, மரிக்கக் கூடிய மரிக்க வேண்டிய ஜீவிகளைப் பற்றிப் பேசுகிறோம். அவர்களுடைய “எப்பொழுதும்” என்பது அக்கினி அவர்களின் கிரியைக்குத்தக்க பலனைக் கொடுத்து

சாகும் தன்மை நிலைக்கும் வரையில் என பொருள்படுகிறது.

## அதிகாரம் ஏழு
# ஆத்துமாவும் சரீரமும் அழிக்கப்படுகிறது

துன்மார்க்கரின் இறுதி முடிவு பற்றிய கடைசி கட்ட உண்மை நிலைக்கு நம்மை இது கொண்டு வந்து சேர்த்திருக்கிறது: இரட்சிக்கப்படாதோர் அவர்களுடைய பாவங்களுக்கு ஏற்ப தண்டனை பெற்ற பிறகு அவர்கள் ஜீவிப்பதிலிருந்து சரீரம், ஆத்துமா உட்பட நீக்கப்படுகிறார்கள். இயேசு அதனை மிக எளிமையாக கூறுகிறார், “சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.” (மத்தேயு 10:28).

வெளிச்சம் போட்டுக் காட்டும் இந்த கூற்றுக்குப் பிறகு துன்மார்க்கர்களுக்கு சாவாமை உண்டு என்று எப்படி எவரும் தொடர்ந்து உரிமைக்கோர முடியும்? ஜீவனின் ஈவை கொடுக்கக் கூடிய ஒரே ஒருவரான இயேசு, நரகத்தில் இருப்பவர்கள் ஏதோ ஒரு உருவம் கொண்டு தொடர்ந்து வாழமுடியும் என்கின்ற சாத்தியக் கூறுகளை நிராகரிக்கிறார். நித்தியத்துக்கும் ஜீவன் பரிகரிக்கப்படும் மற்றும் சரீரம் அக்கினித் தழலில் நிர்மூலமாக்கப்படும்.

சங்கீதக்காரன் எழுதினார், "துன்மார்க்கரோ அழிந்துபோவார்கள், கர்த்தருடைய சத்துருக்கள் ஆட்டுக்குட்டிகளின் நிணத்தைப்போல் புகைந்து போவார்கள், அவர்கள் புகையாய் புகைந்து போவார்கள்" (சங்கீதம் 37:20). "இன்னும் கொஞ்சநேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்; அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை" (வசனம் 10).

நரகத்தில் நடைபெறும் அழிவு குறித்து விவரிக்க மனித மொழிகளின் மிக சக்திவாய்ந்த, உறுதியான வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன, ஆனாலும் ஜனங்கள் எழுத்தாளர்கள் சொல்லுவதை உண்மையில் அவர்களுடைய வார்த்தைகள் பிரதிபலிக்கவில்லை என்று இன்னமும் வலியுறுத்துகிறார்கள். "அழித்தல்", "புகைந்துபோதல்", "சுட்டெரித்தல்", "பட்சித்தல்", "மரணம்" - இந்த வார்த்தைகளெல்லாம் மற்றெந்த புத்தகங்களைக் காட்டிலும் வேதாகமத்தில் எதிர்மறையான, புதிரான அர்த்தமுள்ளவைகளா? நாம் அப்படி நினைப்பதற்கு ஒரு காரணமும் இல்லை. உண்மை என்னவென்றால், நம்முடைய மகா பெரிய தேவனின் அன்புக்கு எதிராக இறையியல் ஒருவித பயமுறுத்தும் முகத்தைக் காட்டுகிறது. அவர் ஹிட்லரைவிட கொடூரமானவர் போல சித்தரித்துக் காட்டப்படுகிறார். ஹிட்லர் மக்களை துன்புறுத்தி அவர்களோடு பரிசோதனை செய்திருந்தாலும் கடைசியில் மரிக்க அனுமதித்தார். அனால் தேவன் இந்த மரணமில்லாத ஆத்துமாக்கள், நித்தியம் நித்தியமாக உயிரோடிருந்து அவர்கள்

வேதனையில் நெளிவதையும், அலறி துடிப்பதையும் பார்ப்பதற்காகவே உயிரோடு வைத்திருப்பார் என இறையியலாளர்கள் வாதிடுகிறார்கள்.

## அதிகாரம் எட்டு
# தேவனின் நீதி நிரூபிக்கப்படுகிறது

இப்படிப்பட்ட ஒருகாட்சி தேவனுடைய அன்பை தவறாக பிரதிபலிப்பது மட்டுமல்லாமல், அது அவருடைய நீதியை திரித்தும் காட்டுகிறது. மரித்த பிறகு இழந்து போன ஒவ்வொரு ஆத்துமாவும் உடனே முடிவே இல்லாத நரகத்துக்குச் செல்கிறார்கள் என்கின்ற உட்பிரிவு உள்ள கொள்கை பற்றி சற்றே நினைத்துப்பாருங்கள். ஒரு மனிதன் தான் மிகவும் விரும்பின ஒரு பாவத்துடன் 5,000 ஆண்டுகளுக்கு முன்பதாக மரித்தான் என வைத்துக்கொள்வோம். அவனுடைய ஆத்துமா நித்தியத்துக்கும் வேதனைப்பட அக்கினிக்குள் செல்கிறது. இன்னொரு மரணத்தையும் சித்தரித்துக் கொள்வோம் லட்சக்கணக்கான மரணங்களை மேற்பார்வையிட்ட அடால்ப் ஹிட்லரின் மரணம் பிரசித்திப்பெற்ற கொள்கையின்படி அவருடைய ஆத்துமாவும் நித்தியமான ஆக்கினைப்பெற நரகத்துக்கு உடனே செல்கிறது. ஆனால் ஒரே ஒரு பாவத்துக்காக இழந்துபோன அந்த மனிதன் ஹிட்லரைக் காட்டிலும் 5000 ஆண்டுகளுக்கு மேலாக எரிந்து கொண்டிருப்பான். அது எப்படி நீதியாகும்? தேவன் அப்படித்தான் நடத்துவாரா? அது, மரித்த

ஒவ்வொருவரும் அவனவனுடைய கிரியைக்குதக்க பலனடைவார்கள் என்கின்ற வேதாகம கூற்றுக்கு எதிராக இருக்கும்.

துன்மார்க்கரின் தண்டனைப்பற்றி இரண்டு எதிரெதிரான கருத்துகள் இப்பொழுது உலவுகின்றன. ஒன்று உலகளாவிய வாதம், அது தேவன் அதீத அன்புள்ளவராகையினால் யாரையும் இழப்பதற்கு அனுமதிக்கமாட்டார் என்று திருப்தியடைகிறது. அடுத்தது, நித்தியம் நித்தியமாக ஒரு இருண்ட இடத்தில் துன்பம் தரும், இம்சை நிறைந்திருக்கும் முடிவில்லாத மனவேதனை எனும் அச்சமளிக்கும் கொள்கை. இரண்டுமே தவறானது. உண்மை இவைகளுக்கு இடையில் இருக்கிறது. தேவன் துன்மார்க்கரை அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கவாறு தண்டிப்பார். ஆனால் இந்த செயல்முறையில் தீமையை அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்க செய்யமாட்டார்.

பல நேர்மையான ஆத்துமாக்கள் அவருடைய குணாதிசயத்தின் இந்த தவறான சித்தரிப்பினால் கடுமையான மனமாற்றமடைந்து தேவனிடமிருந்து பின்வாங்கிப் போயிருக்கிறார்கள் என நான் உண்மையில் நம்புகிறேன். எந்தவித குறிக்கோளும் இல்லாமல் முடிவில்லாத சித்திரவதைக்கு தீமை செய்தவர்கள் உள்ளாக்கப்படுவார்கள் என தீர்க்கின்ற ஒருவர் மீது அவர்கள் அன்பு செலுத்தமாட்டார்கள். புணர் வாழ்வு சாத்தியமில்லை. இப்படிப்பட்ட மறுத்துப்பேச முடியாத ஏற்பாட்டினால் ஒரு பழிவாங்கும் ஆவியின் மூலம் பழிக்குப்பழி

வாங்குதல் மட்டுமே கொடுக்கப்பட முடியும். தேவன் அப்படியிருக்கிறாரா?

நரகத்தைப் பற்றி வேதாகம சத்தியத்தைக் கேட்ட பிறகு, ஒரு வங்கி மேலாளர் தன்னுடைய கரங்களை என் தோள்மீது வைத்து இப்படி சொன்னார், "ஜோ, நான் மறுபடியும் விசுவாசியாகிறேன். வருடக்கணக்கில் நான் கடவுளை புரிந்து கொள்ள முடியாதவனாக இருந்தேன் ஏனெனில் தேவன் துன்மார்க்கரை நித்தியம் நித்தியமாக சித்திரவதை செய்பவர் என போதிக்கப்பட்டேன்."

## அதிகாரம் ஒன்பது

# வருத்தமோ மரணமோ இனி இல்லை

சீக்கிரத்தில் ஒருநாள் தேவன் ஒரு சுத்தமான உலகத்தைப் பெறப்போகிறார். பாவத்தின் எல்லா தாக்கங்களும் நிரந்தரமாக அகற்றப்படும். அங்கே பாவமிருக்காது, பாவிகள் இருக்கமாட்டார்கள் மற்றும் சோதிப்பதற்கு பிசாசும் இருக்காது. அதியிலே தேவன் என்ன திட்டம் வைத்திருந்தாரோ அதுபோலவே அப்படியே இருக்கும்.

யோவான் வருங்கால இருப்பிடத்தை இந்த வார்த்தைகளால் விவரிக்கிறார். "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின." (வெளிப்படுத்தின விசேஷம் 21:4).

விலையேறப்பெற்ற அந்த வார்த்தைகளில் இந்த மறுபடியும் உருவாக்கப்பட்ட மொத்த உலகத்தில் எந்த பகுதியினருக்கும் ஏதாகிலும் வேதனை தரக்கூடிய எந்த வார்த்தைகளுக்கு இடமிருக்கிறதை நீங்கள் காண முடியுமா? அலறுதலும் வருத்தமும் இனி இருக்காது என்று தேவன் சொன்னார். அவருடைய வார்த்தையை நீங்கள் நம்புகிறீர்களா அல்லது மனிதனுடைய கருத்தை நீங்கள் தெரிந்தெடுக்கிறீர்களா? இந்த வாக்குத்தத்தத்தை எழுதிய நான்கு வசனங்களுக்கு முன்பு துன்மார்க்கர் எப்படி அக்கினிக்கடலுக்குள் தள்ளப்படுகிறார்கள் என யோவான் விவரித்தார். "ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான். பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின" (வெளிப்படுத்தின விசேஷம் 20:15, 21:1).

வெளிப்படுத்தின விசேஷம் 20:9 - ன் படி அந்த அக்கினிக் கடலானது இந்த பூமி கிரகத்தில் தான் இருக்கிறது. இந்த இடத்தில் தான் துன்மார்க்கர் எரிந்து மாண்டு போவார்கள், மற்றும் தேவன் அதற்கு பதிலாக அதின் இடத்தில் புதிய பூமியை உருவாக்குவார் என்பதை தயவு செய்து கவனியுங்கள். அந்த அக்கினி துன்மார்க்கரை பட்சித்துபோடுமுன் புதிய எருசலேம் இறங்கி வருகிறது, அதற்குப் பிறகு 4-ம் வசனத்தின் படி அங்கே இனி துக்கமோ, வருத்தமோ, அலறுதலோ அல்லது மரணமோ கிடையாது. மேற்கொண்டு

வருத்தம் இருக்கக்கூடாது என்பதற்காகவே அங்கே நித்திய நரகமும் இருக்க முடியாது. இந்த இரண்டுமே ஒன்றுக்கொன்று பரஸ்பரம் பிரத்தியேகமாக இருக்கிறது. அவருடைய திட்டம் மூலமாய் இறுதியில் வேதனை முடிவடையும் என்பதால் நாம் ஒவ்வொரு நாளும் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். துன்பத்தை உருவாக்குவதற்கு சாத்தான் இங்கே இருக்கமாட்டான் மற்றும் அவருடைய புதிய இராஜ்யம் வருத்தத்தின் நிழலைக் கூட பெற்றிருக்காது என்று தேவன் வாக்களிக்கிறார்.

## அதிகாரம் பத்து

# நரகம் நமக்கென்று திட்டமிடப்பட்டதல்ல

இறுதியாக, நரகம் உங்களுக்காகவோ அல்லது எனக்காகவோ என்று ஒருபோதும் திட்டமிடப்படவில்லை என்பதற்காக நாம் சந்தோஷப்பட வேண்டும். இயேசு சொன்னார் அது "பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது." (மத்தேயு 25:41). நாம் அக்கினியில் தவறி விழநேர்ந்தால், அது நாம் செய்யும் மாபெறும் பிழையாக இருக்கும். நொறுக்கப்பட்ட இயேசுவின் உடலைத்தாண்டி மற்றும் பிதாவின் அன்பு, பரிசுத்த ஆவியின் வாதிடுதல், அதோடு பரவலாக செல்வாக்குள்ள லட்சக்கணக்கான தேவதூதர்களின் செல்வாக்கு இவை எல்லாவற்றையும் தவிர்த்துவிட்டு நீங்கள்

அங்கே போக வேண்டியதாயிருக்கும். இந்த மொத்த உலகில் பதில் கூறமுடியாத ஒரு முக்கியமான கேள்வி இருக்குமென்றால் அது இதுதான், “இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்?” அதற்கு பதிலே இல்லை ஏனென்றால் கிறிஸ்து மற்றும் அவரது சிலுவை மூலமாக தவிர தப்பித்துக்கொள்ள வேறு வழியில்லை.

பாவம் செய்ததினால் யாரும் இழக்கப்படமாட்டார்கள், ஏனென்றால் ஒவ்வொருவரும் பாவம் செய்திருக்கிறார்கள். பொய் சொன்னான், திருடினான் அல்லது விபசாரத்தில் ஈடுப்பட்டான் என்பதற்காக ஒருவனும் பரலோகத்தை விட்டு தள்ளி வைக்கப்படமாட்டான். எவரும் இழந்து போகிறார்கள் என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம் அவன் தன் பாவத்தை விட்டு விலகி எல்லா பாவங்களையும் மன்னிக்கவும் அநீதத்திலிருந்து சுத்திகரிப்பு செய்யவும் தயாராயிருக்கும் அன்பான இரட்சகரின் கரங்களில் வந்தடைய மறுப்பதேயாகும். “தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்” (யோவான் 3:16).

*******

AMAZING FACTS
India

## அமேசிங் ஃபேக்ட்ஸ் வேதாகமப் பாடங்கள் மூலம் உங்கள் தேடுதலைத் தொடருங்கள்!

மனதைக் கவரும், ஊக்கமூட்டும்
இந்தத் தொடர் சத்தியங்கள் உங்கள்
எதிர்காலத்தை தைரியத்துடனும்
நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள உதவும்.

எங்களை தொடர்பு கொள்ள

# BibleStudy.AFTV.in

என்ற இணையதளத்தில் இன்றே
எங்களை சந்திக்கவும்.

AMAZING FACTS
India

தேவனுடைய செய்தியே எங்களுடைய ஊழியம்




BOOKSTORE.AFTV.INற்கு வருகைத் தரவும்.

இங்கே நீங்கள் கிறிஸ்தவப் புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் புக்மார்க்குகள் என பல பயனுள்ள பொருட்களை வெவ்வேறு மொழிகளில் வாங்கலாம்.

உங்கள் வீட்டிற்கே டெலிவரி செய்யப்படும்!

இன்னும் அதிகமான **இலவச**

# டிஜிட்டல் பத்திரிக்கைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள்.




**AFTV.in/Free-Book-Library**

ஆங்கிலம், ஹிந்தி, தெலுகு என பல மொழிகளில் கிடைக்கிறது!

AMAZING FACTS India
Post Box No. 51 • Banjara Hills
Hyderabad, TS 500034
www.AmazingFactsIndia.org